**திவுலபிட்டிய பிரதேச சபை**

**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்டிருந்தன. ஆண்டிற்கான கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 26 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து திவுலபிட்டிய பிரதேச சபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ)மீளாய்வாண்டில் நிர்மானிக்கப்பட்ட ரூபா 6,059,428 பெறுமதியான 4 வேலைத் திட்டங்களுடைய பெறுமதி காணி கட்டட கணக்குகளில் மூலதனமாக காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ)4 வேலைத் திட்டங்களின் மீளாய்வாண்டில் எடுத்த முற்பண நிலுவை கழிக்கப்படாமல் மொத்த வேலைத்திட்ட பொறுமதிக்கு கடன்பட்டோருக்கு ஒதுக்கிவைக்கப்பட்டதால் ரூபா 392,000 கூடுதலாக காணப்பட்டுள்ளது.

(இ) இடைநிறுத்தப்பட்ட வடல்கம மைதான அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்காக கணக்கீடு செய்ய இருந்த ரூபா 4,371,890 பெறுமதியான வரவு மீதி தீர்ககப்படாது இருந்தமையால் மீளாய்வாண்டில் கடன்பட்டோர் ரூபா 4,371,890 ஆல் கூடுதலாதக காணப்பட்டது.

(ஈ) தொட்டதெனியாவ மின்சார பிரோதம் எரியூட்டும் இடத்தில் நிறம் தீட்டுவதற்காக செலவிடப்பட்ட ரூபா 15,490 பெறுமதியானவை மூலதன செலவில் கணக்கிடப்பட்டிருந்தது.

(உ) 2014ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களை பார்வையிடும் போது மாகாண சபை, உள்;ராட்சி அமைச்சிடமிருந்து நன்கொடையாக கிடைத்த உபகரணத்தின் பெறுமதி விலைமதிப்பீடு செய்யப்பட்டு 2015 ஆம் ஆண்டில் நிலையான சொத்திற்கு எடுக்கப்படவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்காக கிடைத்த நிலையான வைப்பு வட்டி ரூபா 127,377 கணக்கீடு செய்யப்படடிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 155,818,668 பெறுமதியான 5 கணக்கீட்டு விடயங்கள் சம்மந்தமாக மீதி உறுதிப்படுத்தலும், பேரேடு மற்றும் உப பேரேடு சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வில் முறையாக கணக்கு செய்ய முடியாதுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 19,310,290 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 30,736,777 ஆக விளைந்திருந்தது.

### 2.2 நிதி கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதி ஒழுங்கு விதி 177 இன் பிரகாரம், சேகரிக்கப்பட்ட சகல வருமானங்களும் அத்திகதியில் அல்லது விரைவாக வங்கியில் இடப்படவேண்டிய போதிலும் ரூபா 24,426 பெறுமதியானவை சொத்து ஞவழி பண்ணிய 10 நாளில் இருந்து 2 மாத காலப்பகுதிக்கு தாமதித்து காசு கொடுத்திருந்தார்.

(ஆ) 2006ஆம் ஆண்டிலிருந்து இதுவரைக்கும் கொண்டுவரப்பட்ட ரூபா 119,062 பெறுமதியான மறுக்கப்பட்ட காசோலைகளின் நிலுவை பற்றி இனங்காணப்பட்டு தீர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டில் ஆரம்ப திகதிக்கு உள்ள ரூபா 15,500,000 பெறுமதியான நிலையான வைப்பு பணம் சபை தவிசாளர் மற்றும் செயலாளரட சபை அனுமதி மற்றும் உள்;ராட்சி ஆணையாளரின் அனுமதி இல்லாமல் 2015 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதத்தில் நிலையான வைப்பு காசுக்கு இதனை 2014 வருடத்தில் செய்யப்பட்ட காசு மீள் நிரம்பலாகாத வேலைத் திட்டங்களுக்கு கொடுப்பனவு செய்யப் பயன்படுத்தியிருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மை வருமானம் மற்றும் கிடைக்கவேண்டிய வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்படப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், கிடைக்கவேண்டிய வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | பாதீடு (ரூபா) 000' | உண்மை (ரூபா) 000' | டிசெம்பர் 31 மொத்த நிலுவை (ரூபா) 000' |
|---|---|---|---|
| ஆதனவரி | 6,170 | 6,105 | 2,681 |
| வாடகைகள் | 2,085 | 1,267 | 3,800 |
| வியாபார உரிமங்கள் | 293 | 294 | 38 |
| | 8,548 | 8,026 | 6,519 |

மேற்படி விடயங்களின் படி கிடைக்கவேண்டிய வருமானம் அறவிட சபையினால் போதுமான படிமுறைகள் எடுக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டிருந்தது.

**2.3.2 ஆதனவரி**

-------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திவிலபிட்டிய பிரதேச சபை எல்லை 1987 இலக்கம் 15 ஆகிய பிரதேச சபைச் சட்டத்தில் 134 ம் பந்தியின் பிரகாரம், அபிவிருத்தி செய்த பிரதேசமாக 2007 பெப்ரவரி 9ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 1484 வர்த்தமானி அறிவித்தலில் அறிவித்திருந்தது. ஆதனவரிக்காக தற்போது பயன்படுத்தப்படும் 1993 மற்றும் 2003 ஆகிய ஆண்டில் செய்யப்படாமையால் புதிய விலைமதிப்பீடு செய்வதற்காக 1987 இலக்கம் 15 பிரதேச சபை சட்டத்தின் 146 பந்தியின் பிரகாரம் பிரதம அமைச்சு, அற்றும் விடயம் தொடர்பான அமைச்சிடமிருந்து கிடைத்திருந்த அனுமதி 2013 மார்ச் 28 ஆந் திகதி பொதுக்கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், புதிய ஆதனவரி விரல மதிப்பீடு செய்வதற்காக திவிலபிட்டிய உப அலுவலகத்தில் 25,000 ஆதன வரி அலகுகள் உள்ள சொத்துக்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் தொட்ட தெனியாவ மற்றும் கெகல் அல்ல (வடல்கம) உப அலுவலகத்தில் சொத்து இனங்காணப்பட 2015 திசெம்பர் 31ம் திகதி வரைக்கும் ஆரம்பிக்கப்படாமல் இருந்தது.

(ஆ) ஆதனவரி விலை மதிப்பீடு செய்வதற்கு பயன்படுத் உள்ள திட்டத்திற்கான காலப்பகுதி 2014 ஆகஸ்ட் 01 இல் இருந்து 2014 ஜனவரி 31 வரைக்கும் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 திகதி வரைக்கும் விலை மதிப்பீடு செய்யும் திட்டம் முடிக்கப்படாமல் இருந்தது.

(இ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 2,681,508 பெறுமதியான ஆதனவரி நிலுவைக்குள் 5 வருடத்திற்கு மேலாக உள்ள நிலுவை ரூபா 1,699,951 ஆக காணப்பட்டுள்ளது.

(ஈ) நிவிலபிட்டிய உப அலுவலகத்திற்கு சொந்தமான 11 வியாபாரங்கள் விலை மதிப்பீட்டு திணைக்களம் மூலமாக விலை மதிப்பீடு செய்யப்படாது தனியார் விலை மதிப்பிட்டாளரை பயன்படுத்தி விலை மதிப்பீடு செய்திருந்தது.

(உ) 2007 பெப்ரவரி 09 ஆந் திகதி இலக்கம் 1484 வர்த்தாமானி அறிவித்தலின் படி நிவிலபிட்டிய பிரதேச சபை எல்லை அபிவிருத்தி ஆன பிரதேசங்களாக அறிவித்திருந்த போதிலும் அதன்படி ஆதனவரி அறவிடுவதற்கு ஏற்பாடு செய்யப்படாமல் 1990 வர்த்தகமானி அறிவித்தலை அடிப்படையாக கொண்டு ஆதனவரி அறவிட்டிருந்தது.

**2.2.3 வாடகைகள்**

---------------

(அ) 1999 ஆண்டிலிருந்து கொண்டுவரப்பட்ட கடைகள் மற்றும் சந்தை வரி ரூபா 792,214 பெறுமதியானவை அறவிடுவதற்கு மீளாய்வாண்டு வருடத்திலும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தது. இன்றும் உள்;ராட்சி ஆணையாளருடைய அனுதியுடன் கடை வாடகை ரூபா 182,685 மற்டறும் சுநவெ ரூபா 55,083 பதிவேட்டில் இருந்து எடுப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்கீடுகளில் பதிவளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2006, 2007 ஆண்டிலிருந்து அறவிடப்படாமல் இருக்கின்ற வாடகை நிலுவை ரூபா 2,433,647 ஆக காணப்பட்டுள்ளது.

2.3.4 **நீதிமன்ற தண்டப்பணம்**

---------------------------------

2012 மற்றும் 2013 ஆண்டுகளுக்காக நீர்கொழும்பு எல்லைக்கு சொந்தமான நீதிமன்ற தண்டப்பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 முத்திரைத் தீர்வைக் கட்டணம்

2015ம் ஆண்டிற்கு சொந்தமான 2014 ஆண்டிற்கு சொந்தமான முத்திரைத் தீர்வை வருமானம் நீர் கொழும்பு, அந்தனகல்ல மற்றும் கம்பஹா காணி பதிவாளர் அலுவலகத்தில் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்து முகாமைத்துவம்

**விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

(அ) திவுலப்பிட்டிய சந்தை நிலத்தில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட இலக்கம் 17,18,19,20 ஆகிய மேல் மாடியில் 4 கடைகளுக்கு 2015 நவம்பர் மாதம் வரைக்கும் வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) சபை நிலத்தில் உள்ள கடந்த ஆண்டுகளில் இருந்து உடைக்கப்பட்ட பொருட்களை அப்புறப்படுத்துவற்கு சபையினால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்கு சொந்தமான லான்மாஸ்ரர் ஒன்று 2003 ஆண்டிலிருந்து விளைவற்றுக் காணப்பட்டிருந்த போதிலும் திருத்தம் செய்வதற்கு அல்லது வேறு ஏதாவது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது சபைக் கட்டிடத்தினுள் துருப்புடித்துக் காணப்பட்டுள்ளமை பற்றி 2016 ஏப்ரல் 28ம் திகதியில் செய்யப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2015 இருப்பு கணக்கெடுப்பின் அறிக்கையின்படி சபைக்கு சொந்தமான ரூபா 130,438 பெறுமதியான பொதுக் கிணறுகள் 16 பயன்படுத்தப்படாது இருந்தது.

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டில் யூலை மாதம் வரைக்கும் சபைக்கு அருகில் உள்ள நிறுவனங்களின் ஒயில் வாங்கப்படாமல் வேறு நிறுவனங்களில் அதிகளவு விலைக்கு வாகன ஒயில் மற்றும் வேறு ஒயில்கள் கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 11,150க்கு நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) பக்கோ லோடருக்காக தனியார் காப்புறுதி கம்பனியில் ரூபா 110,011க்கு முழுமையான காப்புறுதி எடுத்துள்ளனர் இதற்காக ரூபா 95,570 க்கு குறைந்த விலையில் சமர்ப்பித்த கம்பனியில் வாங்காமல் மற்றும் அரச காப்புறுதி கம்பனி உள்ளபோதும் தனியார் காப்புறுதி கம்பனியில் முதலீடு செய்வதற்கான காரணம் கணக்காய்வுக்கு விபரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

#### 3.3.1செயற்திட்ட முன்னேற்றம்

2015 ஆம் ஆண்டில் சபைக்கு அபிவிருத்தி திட்டத்தில் உள்ள 267 திட்டங்கள் அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் அது சம்மந்தமான ஒப்பந்த வேலைகளுடன் ீசழிபசநளள 2015 திசெம்பர் 31 திகதிக்கு பின்வருமாறு அவதானிக்கப்பட்டது.

(அ) கிராம முன்னேற்றத்திற்கான 100 நாள் வேலைத்திட்டத்தின் 21 திட்டத்திற்கான வேலைகள் 2015 திசெம்பர் 31 திகதி வரைக்கும் ஆரம்பிக்கப்படாமல் இருந்தது. சபைக்கு சொந்தமாயில்லாத காணிக்கு அபிவிருத்தி செய்வதற்கான அனுமதியை வழங்கியமையால் இந்த நிலமை ஏற்பட்டது என செயலாளர் எனக்கு அறிவித்திருந்தார்.

(ஆ) 2011 செப்டம்பர் 27 ஆந் திகதி 452 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பந்தம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில், குறித்த சமுதாய அடிப்படையிலான நிறுவனம் 3 ஒப்பந்தங்களுக்கு அதிகமானவற்றில் ஈடுபட்டிருக்ககூடாது எனக் குறிப்பிடப்பட்ட போதும் அவ்வரம்பை மீறி ஒப்பந்தங்கள் நடவடிக்கைகள் நடைபெற்றிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் சபை நிதியில் கொட்டதெனிய உப அலுவலகத்திற்கு சொந்தமான 14 திட்டங்களும், கெகல் அல்ல உப அலுவலகத்திற்கு சொந்தமான 26 திட்டங்களும், திவலப்பிட்டிய உப அலுவலகத்திற்கு சொந்தமான 22 திட்டங்களும் மொத்தமாக 62 திட்டங்களிற்கும் அனுமதி

கிடைத்திருந்த போதும் சபைநிதி காணாமையினால் மீளாய்வாண்டு இறுதி வரைக்கும் அதில் 25 திட்டங்கள் முற்றாக நிறைவேற்றப்படாமல் இருந்தது.

### 3.3.2 கல்பே பொதுநோக்கு மண்டப நிர்மாணம்

இது சம்மந்தமாக 2016 ஏப்ரல் 29 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திட்டங்களிற்கு சொந்தமான கட்டட திட்டம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 2014 நவம்பர் 28ம் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவ் திட்டத்திற்கு அனுமதி கிடைத்திருந்த போதிலும் அத் திகதியில் இருந்து 32 நாட்களிற்குள் அத் திட்டங்கள் நிறைவுறுத்தப்பட்டு கையளிக்கப்பட வேண்டும் என உத்தரவாதம் பெற்று ஒப்பந்ததாரருடன் ஒப்பந்தம் செய்திருந்த போதிலும் அவ்வேலைகள் 2015 ஆகஸ்ட் 3ம் திகதி யிலே முடிவடைந்துள்ளது.

(இ) ஒப்பந்தம் ஒப்படைக்கும் போது சங்கங்களிடம் நிதி கிடைப்பனவு உள்ளதா என பரீட்ச்சீப்பு செய்வது பற்றிய அவதானிப்பு கிடைக்கவில்லை. நிதி இல்லாமையால் வேலைகள் தாமதமானது என 2015 ஆகஸ்ட் 13 ஆந் திகதி கடிதத்தில் ஒப்பந்ததாரரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளவும் அனுமதி கொடுக்கப்பட்ட வேலைகளிற்கு 2015 யூன் 15ஆந் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 3 மாத காலப்பகுதி வழங்கியிருந்த போதிலும் அவ்வேலைகள் 2015 நவம்பர் 26ம் திகதி முடிவடைந்துள்ளது.

(உ) கணியச் சிட்டையில் போட்டோ பிரதி சமர்ப்பித்திருந்த போதிலும் அது தெளிவாக தெரியப்படவில்லை.

(ஊ) இவ் கட்டிடம் பயன்படுத்துவதற்கு நன்றாக இல்லை என்றும் திட்டங்களில் பகுதி வேலைகள் மட்டும் சரியாக செய்யப்பட்டது என்பதும் பௌதிக பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டிருந்தது

### 3.3.3 செயற்திட் தாமதம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண முன்னேற்ற செயற்திட்டத்திற்காக ரூபா 5,000,000 பெறுமதியான அஸ்வென்னவத்த வட்டகிர கல்கந்த சந்தை திருத்தம் செய்வதற்குள்ள வேலைகள் 2015 செப்ரெம்பர் 15ஆந் திகதிக்கு நிறைவுறுத்த வேண்டும் என அறிவித்திருந்த போதிலும் 2015 திசெம்பர் மாதம் வரைக்கும் 60 வீதம் மட்டும் நிறைவுற்று இருந்தது.

(ஆ) மாகாண முன்னேற்ற செயற்திட்டத்தில் அஸ்வென்ன வத்த கைத்தொழில் நிறுவனங்களிற்கான கட்டிடம் நிர்மானிக்கும் வேலைத்திட்டத்தின் முதலாவது

கொடுப்பனவிற்கான கணியச்சீட்டை தொழிநுட்ப உத்தியோகத்தர் அனுமதி வயங்காமல் இருந்தது. அத்துடன் இவ் திட்டம் 2015 செப்ரெம்பர் 15ஆந் திகதி முடிவடைய வேண்டும் என அறிவித்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி 2016 மே 03 ஆந் திகதி வரைக்கும் முடிவடையாதிருந்தது. இதற்கு மேலதிகமாக அந்த வேலைத்திட்டத்தில் உள்ள செயற்பாட்டு முறி செல்லுபடியாகும் காலம் முடிவடைந்த போதும் அதனை நீடித்தமை பற்றி எந்தவிதமான சான்றுகளும் ஒப்பந்த கோவையினுள் இல்லை.

## 3.4 செயற்பாட்டு அல்லது முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கெகல் அல்ல, தொட்டதெனியாவ மற்றும் திவுலப்பிட்டிய உப அலுவலகங்களுக்கு சொந்தமான 38 தொலைத்தொடர்பு கோபுரங்கள் இருந்த போதிலும் அந்த தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான வருமானம் எடுப்பதற்கு மீளாய்வாண்டில் சபையினால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏல விற்பனை செய்யப்பட்ட இரு காணிகளில் சபைக்கு பொது வசதியை வழங்குவதற்காக ஒதுக்கிவைக்கப்பட்ட காணிகளின் உறுதிப்பத்திரங்களை பெற்று நிலையான சொத்து பதிவேட்டில் பதிவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2008ம் ஆண்டில் இருந்து இது வரைக்கும் கொண்டுவரப்பட்ட ரூபா 2,584,363 பெறுமதியான தவறாக பற்றுச்சீட்டிடப்பட்ட பெறுமதி 2015 திசெம்பர் வரைக்கும் திருத்தம் செய்வதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31ம் திகதிக்கு ரூபா 26,053,880 பெறுமதியான அலுவலர்கள் கடன் மற்றும் முற்பண நிலுவைகளில் உள்ள கூட்டு மொத்த தொகை ரூபா 2,767,965 பெறுமதியான 06 முற்பண நிலுவைகள் பல வருடத்திற்கு முன்னால் இருந்து கணக்குகளுக்கு கொண்டுவரும் போதிலும் அதனை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனுள் உள்ளடங்கியுள்ள ரூபா 2,558,617 பெறுமதியான எரிபொருள் முற்பண நிலுவை 2008ம் ஆண்டில் இருந்து நிலுவையாக உள்ளன.

### 3.5 திண்மக் கழிவு முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது.

(அ) பிரதேச சபை எல்லைக்குள் ஒரு நாளுக்கு சேரும் திண்மக்கழிவுகள் தொன் 5 - 6 உள்ள போதிலும் அதில் பிரதிதெடுக்கும் குப்பைகளின் தொன் 2-3 அளவுகள் நாவன கூட்டெரு தயாரிக்கும் இடத்தில் கூட்டெரு செய்யப்படுகிறது. மீளாய்வாண்டில் குப்பைகள் எடுப்பதற்காக சபையினால் ரூபா 3,063,864 கொடுப்பனவு செய்திருந்தது.

(ஆ)அழிவடைந்து செல்லாத கழிவுகளை போடுவதற்கான காணி கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடு செய்யப்படாமல் இருந்தது. மற்றும் மொத்த சபை எல்லையை பகுதியிலும் குப்பைகள் பிரத்தெடுப்பதற்கு சரியான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 யூலை 05 ஆந் திகதி 1713/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிக் கட்டளையிலும் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான உப விதியின் 22 ஆம் பிரிவின் பிரிவிலும் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திட்டமிடல், மேற்பார்வையிடல், கட்டுப்படுத்தல் தொடர்பாக சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

### 3.6 சூழல் பாதிப்பு

மீளாய்வாண்டில் ஒக்டோபர் மாதம் வரைக்கும் சபைக்கு 43 மக்களின் முறைப்பாடுகள் கிடைத்திருந்த போதிலும் அதில் 19 முறைப்பாடுகள் கிடைத்திருந்த போதிலும் அதில் 19 முறைப்பாடுகள் தவிசாளருக்கும், வேலை அத்தாட்சகருக்கும் சமர்ப்பித்ததாகவும் பதிவேட்டில் பதியப்பட்டிருந்தது.

2013, 2014 ஆம் ஆண்டில் கிடைத்த 84 முறைப்பாடுகளுக்கான எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
பொதுமக்கள் முறைப்பாடுகள் கிடைத்த காலப்பகுதியில் இருந்து முடிலடைந்த காலப்பகுதி வரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி எந்தவிதமான தகவல்களும் முறைப்பாட்டு பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை.

### 3.7 மனிதவள முகாமைத்துவம்

மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதிக்கு அனுமதிக்கப்பட்ட மற்றும் உண்மையான மனிதவளம் பற்றிய விபரங்கள் பின்வருமாறு

| தரம் | அனுமதிக்கப்பட்ட ஆளணி | உண்மையான ஆளணி | நிரப்ப வேண்டிய ஆளணி |
|---|---|---|---|
| 3ம் நிலையினர் | 03 | 02 | 01 |
| 2ம் நிலையினர் | 40 | 38 | 02 |
| ஆரம்பத்தரம் | 141 | 126 | 15 |
| | ------- | ------ | ----- |
| | 184 | 166 | 18 |
| | === | ==== | === |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது.

(அ) இரு வருமான பரிசோதகர் பதவி 2011 ஏபரல் மாதத்திலும் குறைவாக காணப்பட்ட போதிலும் நீதிமன்ற வழக்கினால் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டாம் என உள்;ராட்சி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபையில் கடமையினை வழங்கும்போது வேலைப் பிரிப்பு முறையாக செய்யப்படவில்லை.

(இ) பயிற்சித் தேவைகளை இனங்கண்டு ஊழியர்களை பயிற்சி அளிப்பதற்கு சபை தேவையான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதேச சபை கட்டடத்தில் ஊழியர் நலச் சேவையுடைய வேலைகள்

குறைந்தளவான மட்டத்திலே காணப்பட்டுள்ளது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் விடயங்களில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்